Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389
மலர் 3

National TAMIL DAILY தேசிய தினசரி

யாழ்ப்பாணம், சார்வரி மாசி 27-ஆம் நாள் றம்ழான் 22. (10-3-61) வெள்ளிக்கிழமை

தபாற் பெட்டி எண்: 49
இதழ் 24

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

தபால் ஊழியர்

# வேலை நிறுத்தம் முடிவு

## ஒரு மாதத்துக்குள் விசாரணை

யாள்ப்பாணம், வெள்ளி

**சென்ற சில தினங்களாக நடைபெற்றுவந்த தபால் ஊழியர் வேலை நிறுத்தம் முடிவடைந்தது. தபால் ஊழியர்கள் யாவரும் இன்று காலை வேலைக்குத் திருப்புவர்.**

**வேலை நிறுத்தம் செய்ததற்காக ஊழியர் எவரும் பழிவாங்கப்படமாட்டார்களென்று போஸ்ட் மாஸ்ரர் ஜெனரல் உறுதியளித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரைச் சேர்ந்த தபால் ஊழியர் ஒருவர் தனது கடமையைச் செய்துகொண்டிருக்கையில் கடற்படை வீரர் ஒருவர் துப்பாக்கி முனையில் பொருத்தப்பட்டுள்ள ஈட்டியால் நெஞ்சில் குத்திக் காயப்படுத்தியதை ஆட்சேபித்து தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

கடற்படை வீரரின் இந்த நடத்தைபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும் தபால் ஊழியர்கள் கேட்டனர்.

யாழ்ப்பாணத்துக்குத் தபால்கள் வரமுடியாமல் போனதுடன், தபால்கள் யாழ்ப்பாணத்தில் பட்டுவாடா செய்ய முடியாமல் தபால் கந்தோரில் குவியத் தொடங்கின. தந்திகள் ஆயிரக்கணக்கில குவிந்துகிடக்கின்றன.

தபால் ஊழியர் சங்கத்தின் தாய்ச் சங்கத் தலைவர்கள் யாழ்ப்பாணத் தபால் ஊழியர்களின் கோரிக்கை பற்றித் தெரிவித்ததுடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தபால ஊழியர்களின் அனுதாப வேலை நிறுத்தம் பரவி வருவதையும் சுட்டிக் காட்டினர்.

நேற்று போஸ்ட் மாஸ்டர் ஜெனரல திரு. செனிவிரத்தினவும் தபால் ஊழியர் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணத்துக்கு வந்து தபால் ஊழியர்களையும் உத்தியோகத்தர்களையும் சந்தித்துப் பேசினர்.

தபால் ஊழியர் தாக்கப்பட்டது பற்றி ஒரு மாதத்துக்குள் விசாரணை நடத்துவதாக போஸ்ட் மாஸ்ரர் ஜெனரல் உறுதியளித்ததுடன் வேலை நிறுத்தம் செய்ததற்காக எவரும் பழிவாங்கப்படமாட்டார்களென்றும் உறுதியளித்தார்.

இதன்பின் தங்கள் வேலை நிறுத்தத்தைக் கை விட்டு இன்று காலை வேலைக்குத் திரும்புவதென தபால் ஊழியர் தீர்மானித்தனர்.

## ஸி. பி. டி. தொண்டமான் சந்திப்பு

கொழும்பு,

திரு. எஸ். தொண்டமானும், திரு, எஸ். டி. பண்டாரநாயகாவும் நேற்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பி, யாழப்பாணத்தில் தாங்கள் நேரில் கண்டறிந்த விஷயங்களை தற்காலிக அரசாங்கத் தலைவர் திரு. ஸி. பி. டி. சில்வாவிடம் விளக்கிக் கூறினர்.

## இன்றைய மறியல்

### மாதர் ஊர்வலங்கள்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசந்துறைச் சிமெந்துத் தொழிலாளர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவர்கள் காங்கேசந்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு ஊர்வலமாகச் செல்வார்கள்.

இந்த ஊர்வலத்தில் காங்கேசந்துறை, தெல்லிப்பழை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் பலரும் கலந்துகொள்வார்களென்று கூறப்படுகிறது.

இன்று கச்சேரியில் நடைபெறும் மறியல் இயக்கத்துக்கு கோப்பாய் எம் பி. திரு. எம். பாலசுந்தரம் தலைமை தாங்குவார்.

கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் நல்லூரிலிருந்து ஊர்வலமாக கச்சேரிக்கு வந்து சேர்வர். இந்த ஊர்வலத்தில் பெண்களும் மாணவர்களும் கலந்துகொள்வார்கள்.

யாழ்ப்பாண நகர மண்டப முன்றலில் இன்றுகாலை மகளிர் கல்லூரி மாணவிகளும், மற்றப் பெண்களும் ஒன்று கூடி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வர்.

## 5000 மக்கள் கலந்து கொண்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், வெள்

சத்தியாக்கிரகப் 'போராட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானதிலிருந்து இதுவரை கண்டிராத அளவு மாபெரும் ஊர்வலமொன்று நேற்று வல்வெட்டித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வந்து சேர்ந்தது. சிறுவர், இளைஞர். முதியவராக ஆண்களும் பெண்களும் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்தில் வயது முதிர்ந்த மூதாட்டி இருவர் வெயில் வெப்பம் தாங்காது மூர்ச்சையடைந்தனர். பின்னர் இவர்களிருவரும் காரில் ஊர்வலத்தின் பின்னே சென்றனர்.

தமிழ் மொழியின் உரிமைக்குப் போராடுவோம், உயிரைக் கொடுத்தும்மொழியைப் பெறுவோம் என்ற சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டு ஊர்வலத்தினர் கச்சேரியை அடைந்தனர்.

கச்சேரி வாசல்களில் நேற்றும் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்றது. தொண்டர்களுக்கு தாக சாந்தி செய்வதற்காக ஏராளமான இளநீர் கச்சேரியின் முன்னால் குவிக்கப் பட்டுள்ளன.

ஆண்களும் பெண்களும் பெருந்தொகையினராக கச்சேரிக்கு வந்து சத்தியாக்கிரகிகளைக் கண்டு திரும்புகின்றனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## இன்ஸ்பெக்டர்மீது 'ஸ்ரீ' கார் உரிமையாளர் வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

1 ஸ்ரீ 9040 இலக்க மோட்டார் காரைக் களவாடியதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது திரு. ஈ. மகாதேவா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு ஏப்ரல் 26ந் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தமிழ் 'ஸ்ரீ' இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட சில மோட்டார் கார்கள் பொலிசாரால் ஏடுத்துச் செல்லப்பட்டதாக செய்தி வெளி வந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இதே போன்று மற்றும் மூன்று கார் சாரதிகளும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்மீது காரைத் திருடியதாகவும் பயமுறுத்தியதாகவும் குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

## சி. பி. டி. சில்வா அனுதாபச் செய்தி

கொழும்பு,வியாழன்.

இந்திய உள்நாட்டுமந்திரி பண்டிதபந்த்தின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து, மந்திரிசபையின் தற்காலிகத் தலைவர் திரு ஸி.பி.டி சில்வா இந்திய அரசாங்க தற்காலிக தலைவருக்கு ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறார்.

## ஒவ்வொரு மாதமும் ஒருநாட் சம்பளம்

யாழ்ப்பாணம்,, லெள்ளி

"மொழி உரிமைப் போராட்டம் முடியும்வரை ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு மாதமும் ஒரு நாட் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும்" என்று நேற்று மாலை நடைபெற்ற யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் நிறைவேறியது.

சனிக்கிழமை 8-மணிக்கு 'ஜாம் ஆ' ஒழுங்கையிலுள்ள ஆசிரிய சங்கக் காரியாலயத்திலிருந்து ஆசிரியர்கள் ஊர்வலமாகக் கச்சேரிக்குச் செல்லுவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பாடசாலைகளில் ஒழுங்கீனம் நிலவுவதற்கு இராணுவத்தின் வருகையே காரணமென்றும் இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து திருப்பியழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

உடனடியாக 500 ரூபாய் மொழிப் போராட்டத்துக்குக் கொடுத்துதவுவதென்றும் கூட்டம் தீர்மானித்தது.

சங்கத் தலைவி திருமதி பூ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுமார் நூறு ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். சனிக்கிழமை நடைபெறும் ஊர்வலத்தில் சுமார் இரண்டாயிரம் ஆசிரியர்கள் கலந்துகொள்வார்களாம்.

## நிருபர்களுக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டங்களுக்குச் செல்வதற்கு பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிச் சீட்டு ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

இனிமேல் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தனித்தனி அனுமதிச் சீட்டு மாநகரசபைக் காரியாலயத்தில் கொடுக்கப்படுமென மேயர் திரு ரி. எஸ். துரைராஜா அறிவித்துள்ளார்.

## எஸ். ஜே. வி. - தொண்டமான் சந்திப்பு

### ஊர்வலத்தைக் கண்டு உள்ளம் உருகினா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லெண்ணத் தூதுவராக யாழ்ப்பாணம் வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பியுமான திரு. எஸ். தொண்டமானும் கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செலவநாயத்தை நேற்றுக் காலை சந்திந்து அந்தரங்கதிதில சம்சாஷணை நடத்தினர்.

இதன்பின் யாழ்ப்பாண நகர மேயர் திரு. ரி. எஸ். துரைராஜாவையும் சந்தித்துப்பேசினர் பின்னர் அவர்களிருவரும் மேயருடன் ஆஸ்பத்திரிக்குச்சென்று பொலிசாராலும் கடற்படையினராலும் தாக்குதலுக்குள்ளாகிக்காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருபவர்களைப் பார்வையிட்டனர்.

இதன்பின் முன்னாள் சட்டசபை சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசாமியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சேர். துரைசாமியின் வீட்டிலிருந்து இவர்கள் புறப்பட்டு வெளிவந்தசமயம் வல்வெட்டித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரியைநோக்கி நகரவீதிகள் வழியாக வந்துகொண்டிருந்த ஐயாயிரம் பேர்களையுடைய ஊர்வலத்தைப் பார்த்தனர். கொதிக்கும் வெயிலில் ஊர்வலத்தில்வந்தபெண்களைக் கண்டதும் அவர்கள் மனமுருகி நின்றனர்.

கச்சேரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மறியல் இயக்கத்தை திரு. தொண்டமானும் திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் நேற்றும் சென்று பார்வையிட்டனர்.

திரு. பண்டார்நாயகா, திருமதி பண்டாரநாயகா திரு. தொண்டமான் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து விமானத்தில் பிரயாணமானார்கள்.

## மணிவாக்கு

பகைவனிடத்தும், நண்பனிடத்தும். மானத்திலும் அவமானத்திலும், குளிரிலும் வெப்பத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் சம நோக்கு உடையவன் பற்றுஅற்றவனுகக் கருதப்படுவான்.

—பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 27 உ (10-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## சத்தியாக்கிரகம் மூன்ருவது வாரம்

இலங்கை அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த திரு. தொண்டமான், திரு. எஸ். டி பண்டாரநாயக்கா இவ்விருவரும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, இங்கு நடைபெறும் சத்தியாக்கிரகத்தையும், பொதுமக்களின் உணர்ச்சியையும் நேரில் கண்டு, தலைவர்களுடனும் பேசிவிட்டு, நேற்று கொழும்பு திரும்பினர். நல்லெண்ணத் தூதாகவே இங்கு வந்ததாகத் தெரிவித்தார் திரு. பண்டாரநாயக்கா. இது மிகவும் நல்லது. இங்கு கண்ட விவரங்களை இவ்விருவரும் அரசாங்கக் கட்சிக்கு உள்ளது உள்ளபடி எடுத்துக்கூறி, இந்த நெருக்கடியைக் கூடிய சீக்கிரத்தில் நல்லபடியாகத் தீர்க்க உதவுவதாயின் அது நாட்டுக்குச் செய்யும் பெரியதோர் சேவையாகும்.

தமிழரின் இந்த உரிமைப் போர் ஆரம்பமாகி இன்றுடன் 19 நாட்களாகின்றன. மகாபாரத யுத்தம் 18 நாட்களே நடந்ததாகக் கூறுவர். அந்தக் கால அளவைத் தாண்டிவிட்டது இந்தப் போராட்டம். என்ருலும் வர வர தமிழ்ப் பொது மக்களின் ஆதரவும் உற்சாகமும் அதிகரித்துவருகிறதென்பதை யாரும் தெளிவாகக் காணலாம். அத்துடன் திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் அதிக தீவிரமாக இந்த இயக்கம்பரவி நடைபெறுவதுடன், வவுனியா, மன்னர் முதலிய இடங்களுக்கும் பரவ இருக்கின்றது. ஆகவே இழுத்தடித்தால் இந்த இயக்கம் தானுக அடங்கிவிடுமென்று அரசாங்கம் கருதுவதாயின் அது பெரும் தவருகவே முடியும்.

தமிழரசுக் கட்சியே இந்த இயக்கத்தை நடத்துகிறதென்றும், மற்ற தமிழர் கட்சிகளும், மலைநாட்டுத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் முதலியவர்களும் இதில் பங்குபற்றவில்லை என்றும் இதை சுலபமாக அடக்கிவிடலாமென்றும், அரசாங்கம் முதலில் ஒரு தப்புக்கணக்குப் போட்டது.

முதல் நாள் நடந்த பொலிஸ் தடியடிதர்பார் இந்த இயக்கத்தைப் பெரிதும் பலப்படுத்தியதுடன், தமிழரசை வரையும் சற்றும் எதிர்பாராத முறையில் ஒற்றுமைப்படுத்திவிட்டது. வர்த்தகரின் இரண்டு நாள் கடையடைப்பு, எல்லாத் தொழிலாளரின் வேலை நிறுத்தம், மற்ற தமிழ்ப் பிரதிநிதிகளின் சத்தியாக்கிரகம், இவையெல்லாம், இந்த இயக்கம் எவ்வளவுதூரம் பலப்பட்டு வருகிறதென்பதையும், காட்டுகின்றன.

நேற்று சுமார் 5,000 பெண்கள் வல்வெட்டித்துறையிலிருந்து ஊர்வலமாக வந்து, யாழ்ப்பாண கச்சேரி முன்பாக அமர்ந்து, பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்த காட்சியை, கொழும்பிலிருந்து வந்திருந்த இரு நல்லெண்ணத் தூதர்களும் கண்டு, இந்த இயக்கத்தின் சக்தியை ஓரளவு உணர்ந்து சென்றனர். ஆண்களுக்கு இடமில்லாதபடி பெண்களே இதைத் தங்கள் போராட்டமாக மேற்கொண்டு வருகிருர்கள். பல பெண்மணிகள் உண்ணவிரததவம் இருக்கின்றனர். இதை நீடித்து வளரவிடுவது, அரசாங்கத்துக்கோ, நாட்டுக்கோ சிறிதும் நன்மை இல்லை.

பிரதமர் இம்மாதக் கடைசியில் திரும்பிவிடுவதற்குமுன் எவ்வித திட்டமான முடிவும் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனல் நிலைமையை மோசமாகாதபடி தடுக்கவும், சமரசத்துக்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவும், தற்காலிக பிரதமர் திரு. சி. பி டி சில்வா கூடுமானதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்ருர்.

இந்த இயக்கம் மிக அமைதியாக நடக்கிறதென்று அரசாங்க அதிபர்களே நற்சாட்சிப் பத்திரம் அளித்தனர். மறியல், ஊர்வலம், கடையடைப்பு, இவற்றுடன் நிறுத்திக்கொள்ளாமல், நிர்மாண முறைகளில் மக்களின் உற்சாகத்தைத் திருப்ப, நல்ல திட்டம் அமைத்துக் காரியங்களைச் செய்யவேண்டும். பொருளாதாரவளர்ச்சிக்கும், வேலையில்லாக் கஷ்டத்தைக் குறைப்பதற்கும், குடிசைத் தொழில், சுயதேவைப்பூர்த்தி இவற்றுக்கான முறையில் திட்டம் வகுத்து, நடத்திவைக்க முற்பட இது நல்ல சந்தர்ப்பம். தமிழ்த் தலைவர்கள் சத்தியாக்கிரகம் செய்வதுடன் நிற்காமல் இவ்வித ஆக்கவழிகளில் மக்களின் கவனத்தைத் திருப்புவது, தவருன வழிகளில், இந்த உற்சாகம் சென்றுவிடாமலும், எதிர்காலத்தில் நல்ல பயன் அளிக்கவும் செய்வதாகும். தொட்டதற்கெல்லாம் அரசாங்கத்தின் உதவியையே எதிர்பார்ப்பதில் பயனில்லை. தன் கையே தனக்குதவி என்றபடி சுயதேவைப்பூர்த்திக்கான முறையில் காரியங்களைச் செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது. நல்லெண்ணத்தூதின் முடிவு எப்படியாயினும் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

# சத்தியாக்கிரகத்தைகைவிட ஒரு நிபந்தனை

## "பார்லிமெண்ட் தமிழுக்கு உரிமை அளிக்கவேண்டும்"

### பட்டிருப்பு எம். பி. விளக்கம்

மட்டக்களப்பு, வியாழன்

"உரிமைக்காகப் பார்லிமெண்டின் உள்ளேயும் வெளியேயும் பலவித முயற்சிகளையும் செய்ததுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திப் பார்த்தும் பயன் கிடைக்காமல் போன பின்னரே தமிழ்ப் பேசும் மக்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் இறங்கியுள்ளனர். இந்நிலையில் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் வருந்தியழைத்தாலும் நாங்கள் போகத் தயாராக இல்லை."

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி,யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்ப் பேசும் மக்கள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரக இயக்கம் சிங்கள மக்களையோ அரசாங்கத்தையோ உதாசீனம் செய்வதல்ல. எங்கள் உரிமைகளை எங்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு உணர்த்துதம் எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு நாங்கள் எங்களை வருத்தித் தியாகம் செய்வதும்தான் இந்த இயக்கத்தின் நோக்கம்.

### திட்டத்தை வெளியிட்டால்

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் எங்களை வருந்தியழைத்தாலும் நாங்கள் கலந்து கொள்ளத் தயாராக இல்லை. தமிழ் மொழிக்கு அந்தஸ்து அளிப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அதுபற்றிப் பரிசீலனை செய்ய எங்களை அழைத்தால் எங்கள் பிரதிநிதியை அனுப்பி வைப்போம். இத்திட்டத்தின்மீது செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட பின்னரே சத்தியாக்கிரகம் கைவிடப்படும்.

### பிரதமரின் செய்தி கேலிக்கூத்து

"சத்தியாக்கிரகம் கைவிடப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தை" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது வானெலிப் பிரசங்கத்தில் தெரிவித்திருந்தார். இது வெறும் கேலிக்கூத்து.

பேச்சுவார்த்தைகள், விவாதங்கள் யாவும் நடத்திப் பயன் கிடைக்காமல் போன பின்னரே சத்தியாக்கிரக இயக்கத்தை மேற்கொண்டுள்ளோம்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கணவர், காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, நாங்கள் உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப் போவதாகக் கொடுத்த முன்னறிவித்தலைத் தொடர்ந்து எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். எங்களுடன் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டார். பின்னர் அவரே அந்த ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்க விட்டார்.

### இவருடன் பேசினேம்

நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் உத்தேசித்துப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினேம். பேச்சுவார்தையில் அவர் அக்கறை காட்டவில்லை.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போதே நீதிமன்ற மொழி மசோதா தமிழ்மொழிமசோதா போன்றவைகளைக் கொண்டு வந்து தமிழ்ப் பேசும் மக்களை அவமதிக்க எண்ணினர்.

எனவேதான் எமது ஜீவாதார உரிமைக்காகப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம்.

தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு சாத்வீக இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கையில் அரசாங்கம் நடந்து கொள்ளும் முறை வருந்துதற்குரியது.

---

## கென்யாட்டாவை சந்தித்தனர்

கென்யாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிகப்படியான ஸ்தானங்களைப் பெற்ற கென்யா ஆபிரிக்கர் ஜனநாயகக் கட்சித்தலைவர்கள் இருவர் காவலில் வைக்கப்பட்டுள்ள கென்யா தலைவர் கென்யாட்டாவை சந்தித்துப் பேசியுள்ளனர்.

---

## முஸ்லிம்களுக்கு செலாவணி வசதிகள்

கொழும்பு மார்ச் 8

மெக்காவுக்குப் புனித யாத்திரை மேற்கொள்ளும் முஸ்லிம்கள் 1956 ம் ஆண்டுக்குப் பின்னர் வெளிநாடுகளுக்கு சென்றிருந்தால் கூட செலாவணி வசதிகள் அவர்களுக்கு செய்துகொடுக்க வேண்டும் என்று நிதியமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இப்பொழுது ஐந்துவருடங்களுக்கு ஒரு முறைதான் வெளிநாடுகளுக்குச் செல்கிறவர்களுக்கு செலாவணி வசதியளிக்கப்படுகிறது.

நிதியமைச்சின் முடிவின்படி புதிய செலாவணி சலுகைகள் முஸ்லிம்களுக்கு மாத்திரம்தான் வழங்கப்படும்.

---

## கலகத்தில் நால்வரைக் கொன்றவருக்கு தூக்கு

கண்டி, மார்ச் 8

1958-ம் வருட கலகத்தில், மகாஓயாவைச் சேர்ந்த ஜினேரியல் என்ற திஸநாயக்கா, ஒரு நகரசுத்தித் தொழிலாளியையும் அவரது மனைவி, இரு புதல்விகளையும் காட்டில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டார். இளைய பெண்ணுக்கு வயது ஒன்றே. எதிரி குற்றவாளி என ஜூரிகள் ஏகமனதாகக் கூறினர். கண்டி அஸைஸ் கோர்ட்டார் எதிரிக்கு தூக்குத் தண்டனை விதித்தார்.

---

## அனுரதபுரிக்கு விமான சேவை

கொழும்பு,புதன்

போசன் விழா சமயத்தில் அனுரதபுரத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என்றும், ஜூன் மாதத்திற்கு முன் இச்சேவை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## ஐயாறன் எழுதுவது

நெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ணத் தூதராக வந்துள்ள தொண்டமானும் எஸ். டி. பண்டாரநாயக்காவும் பச்சை விரோதிகள். பார்லிமெண்டிலே பன்முறையும், தொண்டமானை பண்டாரநாயக்கா தாக்கியுள்ளார். அவரை பார்லிமெண்டுக்கு நியமிக்க வேண்டாமென்று, பிரதமர் சிறிமாவுக்கு தந்தியும் கொடுத்தார். அவ்வளவு விரோதியாக இருந்தவர், தொண்டமானுடன் சேர்ந்து, யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ணத் தூதராக வந்துள்ளதைக் கேட்டதும் என்னல் நம்பமுடியவில்லை.

எப்படி இது முடிந்ததென்று தொண்டமானைக் கேட்டேன். அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் நடந்த சில இரகசியங்களைச் சொன்னர். அங்கு பலரும், தமிழரசுக் கட்சியையும், சத்தியாக்கிரகத்தையும் கண்டித்து, இராணுவத்தை அனுப்பி, இயக்கத்தை நசுக்கிவிட வேண்டுமென்று ஆவேசத்துடன் பேசினராம்.

இதைக் கேட்ட தொண்டமான் எழுந்து, "செய்நன்றியை மறவாதீர்கள். இந்த அரசாங்கம் அமைக்க முடிந்ததற்கு உதவியவர்கள் தமிழரசுக் கட்சியினரே. மார்ச் தேர்தலுக்குப்பின், எஸ். ஜே. வி. கொழும்புக்கு விமானத்தில் வந்ததும் நேரே எங்கள் தொழிலாளர் காங்கிரஸ் ஆபீஸுக்கு வந்தார். யு. என். பி. யை தமிழரசு ஆதரிக்கக் கூடாதென்று கேட்க, இந்த அரசாங்கத்தில் மந்திரிகளாகவுள்ள இருவர் எங்கள் ஆபீஸுக்கு வந்து, எஸ். ஜே. வி.யை மன்றுடிக் கேட்டனர். பண்டாரநாயக்கா செய்த ஒப்பந்தத்தை சுதந்திரக் கட்சி நிறைவேற்றி வைக்குமென்றும் உறுதி கூறினர். சுதந்திரக் கட்சியின் வாக்குறுதியை நம்பினர் எஸ். ஜே. வி., யூ. என். பி.க்கு மாருக வாக்களித்தார். அப்படி உதவியவரின் நன்றியை மறுத்து, அவருக்கு எதிராக இராணுவத்தை அனுப்பாதீர்கள். அதற்குப் பதில் என்னையும் எஸ். டி பண்டாரநாயக்காவையும் அனுப்புங்கள். இராணுவத்தால் முடியாததை நாங்கள் செய்கிறேம்" என்று திடீரென மனதில் உதித்த எண்ணத்தைக் கூறினராம்.

எஸ். டி. பி. யும் இதைக் கேட்டு வியப்புற்று, முடிவில் யாழ்ப்பாணத்துக்கு நேரில் நல்லெண்ணத் தூதராக வர ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. தெய்வம் நினைத்தால் சேராததும் சேர்ந்து, நடவாததும் நடக்குமல்லவா?

* * *

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சென்ற புதன் கிழமை விசேஷ பூசை வழிபாடெல்லாம் நடந்ததாம். இன்றைய நெருக்கடிகள் சுமுகமாகத் தீர்ந்து, மக்கள் நலமுற, காலையில் 1008 சங்காபிஷேகம் விசேஷ பூசை, மத்தியானம் 7 புசல் அரிசி போட்டு அன்னதானம், மாலையில் முத்தமிழ் மணியின் "அப்பரின் வீரநெறி" கதாப்பிரசங்கம் எல்லாம் நடந்ததுடன், சத்தியாக்கிரகிகளுக்கு பிரசாதமும் அனுப்பிவைக்கப்பட்டதாம்.

கச்சேரி அடியில் சத்தியாக்கிரகம் செய்யும்கிறிஸ்தவ அன்பர்களுக்கு, பாதிரியார் வந்து பிரார்த்தனையை நட[illegible] வைப்பதாயும், சைவ மக்களுக்கு யாரும் வருவதில்லையென்றும் அவர்களே தேவார திருவாசகங்களை மனங்கசிந்து பாடி வழிபடுவதாயும் கேள்விப்பட்டேன்.

ஒவ்வொரு கோவிலிலும் விசேஷ பூசை செய்து, அருட்பிரசாதங்களை தினசரி சத்தியாக்கிரகிகளுக்கு அனுப்பி வைத்தால், அவர்களுக்கு மிக உற்சாகமாக இருக்குமல்லவா? நல்லூரான் பிரசாதம் சேர்ந்துவிட்டால், வெற்றியைக் குறித்து எனக்கு சந்தேகமேயில்லை.

* * *

நல்லூர் முருகன் கோயிலிலிருந்து, ஓர் அன்பர் சுமார் 18 மைல் தூரமுள்ள வல்லிபுரம் கிருஷ்ணன் கோவிலுக்கு அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டு சென்று, இந்த இயக்கம் வெற்றிகரமாக முடியவேண்டுமென்று "இன்னல்தீர அண்ணலிடம் பிரார்த்தனை" செய்துகொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

மருமகனிடமிருந்து மாமனிடம் செல்லுகின்ருர் பாரதப் போரை வெற்றிகரமாக, பாண்டவர்களுக்கு முடித்துக் கொடுத்தவர் அந்தக் கண்ணன். அவரை நாடினல் இப்போது தமிழருக்கும் அதே வெற்றி கிடைக்கும்படி அவர் [illegible]மல்லவா?

## திருமலை, மட்டக்களப்பு அரசாங்க அதிபர்கள் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருகோணமலை, மட்டக்களப்பு அரசாங்க அதிபர்களுடன் நேற்றுக் காலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இங்கு திரும்பினர். மூன்றுபேரும் கச்சேரி சத்தியாக்கிரகத்தை நேரில் கண்டதுடன், தமிழரசுக்கட்சி எம்.பி.க்களுடன் பேசினர். அகிம்சா முறையில் நடக்கும் சத்தியாக்கிரகத்தை தாங்கள் பலாத்காரமாகக் கலைக்கப்போவதில்லை என்று தெரிவித்தனர். மத்தியானம் மற்ற இரு அதிபர்களும், விமான மூலம் தங்கள் இடங்களுக்குத் திரும்பினர்.

# காங்கோவில் விமானத்தளங்களைத் திருப்பிக் கொடுக்க

## ஐ. நா. மறுப்பு
## லியப்போல்ட்வில் நிபந்தனைகளை தயாள் நிராகரித்தார்

நியுயார்க் மார்ச் 8

காங்கோவில் ஐ. நா. துருப்புகள் வசமுள்ள பகுதிகளை காங்கோ ராணுவத்திடம் ஒப்படைக்கமுடியாது என்று காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி ராகேஸ்வர தயாள் அறிவித்திருக்கிறார்.

காங்கோவில் ஐ. நா. துருப்புகள் வசமுள்ள விமானத்தளங்கள் உட்பட எல்லா பகுதிகளையும் திருப்பித்தர வேண்டுமென்றும் காங்கோவில் நடமாடும் ஐ. நா. விமானங்களை சோதனைப் போடுவதற்கு காங்கோ துருப்புகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், ராகேஸ்வர தயாள் திருப்பி அழைக்கப்படவேண்டுமென்றும் லியப்போட்விச் அரசாங்கம் ஐ. நா. பிரதமக் காரிய தரிசி ஹமர்ஷில்டுக்கு எழுதியிருந்தது. இந்த நிபந்தனைக்கு உடன்பட்டால்தான் பனை, மட்டாடியா துறைமுகங்களில் காங்கோ துருப்புகள் கைப்பற்றிய பகுதிகளைத் திருப்பித் தர முடியுமென்றும் லியப்போட்வில் அரசாங்கம் ஐ. நாவுக்கு நிபந்தனை விதித்திருந்தது.

ஐ. நா. விசேஷ பிரதிநிதி ராஜேஸ்வர தயாள் லியப்போட்வில் அரசாங்கத்தின் நிபந்தனைகளை முற்ருக நிராகரித்திருக்கிருர். அவர் கானு அதிபர் கஸவுபுவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் பனை, மட்டாடியா துறைமுகங்களில் காங்கோ துருப்புகள் கைப்பற்றிக்கொண்ட பகுதிகளை மீட்பதற்கு ஐ. நா. துருப்புகள் மீண்டும் அத்துறைமுகங்களுக்கு செல்லவேண்டியது அவசியமாகியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிருர்.

பனை, மட்டாடியா, துறைமுகங்களில் சில தினங்களுக்கு முன் காங்கோ துருப்புகளுக்கும் ஐ. நா. துருப்புகளுக்குமிடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையொன்றைத் தொடர்ந்து ஐ. நா. துருப்புகள் பின்வாங்க நேர்ந்தது. காங்கோ துருப்புக்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்ததால் அவர்களுக்கு ஈடுகொடுக்க ஐ. நா. துருப்புகளால் முடியாமல் போய்விட்டது. அதன் காரணமாக ஐ. நா. துருப்புகள் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். அந்தச் சண்டையில் ஐ. நாவைச் சேர்ந்த டூனிசிய துருப்புகள் பலர் காயமடைந்தனர், சிலர் கொலையுண்டனர்.

—

### பந்த் மறைவுக்கு மகாராணி அனுதாபம்

புதுடில்லி, புதன்

பண்டித பந்தின் மரணத்தையிட்டு ஜனதிபதி இராஜேந்திரப்பிரசாதுக்கு பிரிட்டிஷ் மகாராணி ஒரு செய்தியைஅனுப்பியிருக்கிருர். "இந்தியா சிறப்புமிக்க ஒரு பிரஜையை இழந்து விட்டது. நாங்கள் உயரிய நண்பர் ஒருவரை இழந்து விட்டோம்" என தன் அனுதாபச் செய்தியில் அவர் கூறியிருக்கிருர்,

அந்தமான் தீவின் தலை நகரமான போர்ட் பிளயரில் பந்தின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பல கடைகளும், ஸ்தாபனங்களும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

சென்னை சட்ட சபை ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது. டில்லியில் கூடி

### பேசும் தேனீக்கள்!

வியன்ன, மார்ச் 7

தேனீக்கள் பேசுகின்றனவாம்! ஆச்சரியமாகத்தான் இருக்குன்றது. ஆனல் உண்மை. இந்த உண்மையை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கார்ல் வொன் பிரிஷ் என்ற பேராசிரியர் வெளியிட்டிருக்கிருர்.

அங்க அசைவுகள் தாம் அவற்றின் பாஷை என்பது பேராசிரியர் விளக்கத்திலிருந்து தெரியவருகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள தேனீக்கள் ஒரு பாஷையையும், இந்தியாவிலுள்ள தேனீக்கள் வேருெரு பாஷையையும் பேசுகின்றன என்று அவர் கூறுகிருர். "உணவு எங்கே கிடைக்கும் என்பதை நாட்டியமாடுவதின் மூலம் தனது சகாக்களுக்குத் தேனீ அறிவிக்கிறது. அவுஸ்திரேலிய தேனீ தன் கைகளை சூரியனை நோக்கி நீட்டி இடது அல்லது வலது பக்கம் அசைப்பதன் மூலம் உணவு இருக்கும் இடத்தை தெரிவிக்கிறது. அப்படிச் செய்யும் போது அது மிக விறுவிறுப்பாக நாட்டியம் ஆடுகிறது. இந்தியத் தேனீயால் உணவு இருக்கும் இடத்தைக் காட்ட முடியாது ஆனல் நாட்டியத்தின் மூலம் உணவு எங்கே இருக்கிறதென்பதைக் காட்டிவிடுகிறது" என்று அந்தப் பேராசிரியர் தெரிவித்திருக்கிருர்.

—

### மொராக்கோ துருப்புகள்

காங்கோவில் ஐ. நா. துருப்புகளில் சேவை புரியும் மொரக்கோ துருப்புகள் ஐ. நா. அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு பணிய மறுத்துள்ளனர்.

### லண்டனில் பயிற்சிபெறும் இலங்கையர்

லண்டன் மார்ச் 7

இலங்கை கல்லோயா அபிவிருத்திசபையைச் சேர்ந்த ஈ. டி. ஹென்ஸ்மன் என்பவர் பிரிட்டிஷ் நுண் தொழில் முறைகளைப் பயில்வதற்காக லண்டன் வந்துள்ளார். இவர் ஏற்கனவே அமெரிக்கா சென்று பயிற்சி பெற்றிருக்கிருர்.

கடந்த மாதம் ஹென்ஸ்மன் ஸ்கொத்லாந்து சென்று அங்குள்ள நுண்தொழில் முறைகளில் பல அம்சங்களைப் பயின்ருர். தேவையெனக் கழிக்கப்பட்ட உலோகப் பொருள்களைக் கைத்தொழில்களுக்கு உபயோகித்துக் கொள்ளும் முறைகளில் பயிற்சி பெறுவதில் அவர் அதிக அக்கறை கொண்டுள்ளார்.

—

### திருமதி மேனன் அறிக்கை

புதுடில்லி மார்ச் 9

சமீபத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட கலவரங் குறித்து இந்திய பார்லிமெண்டில் வெளிவிவகார அமைச்சின் உதவி மந்திரி திருமதி லட்சுமி மேனன் ஓர் அறிக்கை விடுத்தார். அந்தக்கலவரங்களின் போது வீடுகள் தீவைக்கப்பட்டதாகவும் பலர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

கலகத்தை அடக்க கிழக்குப் பாகிஸ்தான் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதென திருமதி மேனன் பார்லிமெண்டில் கூறினர்,

—

### அட்லிபிரபு லண்டன் திரும்பினா

லண்டன். மார்ச் 9

இந்தியாவிலும் இலங்கையிலும் கடந்த சில தினங்களாக சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருந்த பழைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி பிரபு நேற்றிரவு கல்கத்தாவிலிருந்து விமான மார்க்கமாக இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

## 'நாட்டின் மேம்பாட்டையே கருதி உழைத்தார்'
### பந்தின்மறைவுக்கு மேலும் அஞ்சலி

புதுடில்லி

காலஞ்சென்ற உள்துறை விவகார அமைச்சர் பண்டித பந்தின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்து இந்திய அரசாங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"அரசியலில் இறங்கியது முதல் நாட்டின் மேம்பாட்டையேகருத்திற்கொண்டு உழைத்த ஒரு மாபெரும் தேசபக்தரை, சிறந்த ராஜதந்திரியை நாம் இழந்து விட்டோம்" என்று அரசாங்கதீர்மானத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது.

**சர்வகட்சிகளும் அனுதாபம்**

புதுடில்லி ராம் லீலா மைதானத்தில் பண்டித பந்த் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சர்வகட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் [illegible] த்துக்கு ஜனதிபதி இராஜேந்திரபிரசாத் தலைமை வகித்தார். பந்தின் சேவைகளைப் பாராட்டியும், அவர் பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்தும் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைக் கூட்டத்தினர் எழுந்து நின்று ஏகமனதாக ஆமோதித்தனர். பார்லிமெண்ட் உறுப்பினர் கூட்டத்திலும் பண்டித பந்த் பிரிவுக்குத் துக்கம் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்து, அதன் மேம்பாட்டுக்காக அயராது சேவை புரிந்த தியாக சீலர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பிரிந்து வருகின்றனர். பழைய தூண்கள் ஒன்றன்பின் ஒன்ருகச் சரிகிறது. இது நமக்கு ஈடுசெய்முடியாத பெரு நஸ்டம்" என்று ஆச்சாரி கிருப்பளானி தெரிவித்தார். "பார்லிமெண்ட் விவாதங்களில் மனிதப்பண்பு நடந்து கொள்வதுடன், பிறருக்கும் ஓர் ஆதர்ஷ புருஷராக பண்டித பந்த் விளங்கினர்" என கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பூபேஸ்குப்தா தெரிவித்தார்.

[illegible] ஆசியர் தூரகிழக்கு பொருளாதாரக் கமிஷன் இரு [illegible] எழுந்து நின்று [illegible] அஞ்சலி செய்தது.

## 'பிரச்சினைகளை பெண்கள் அதிக மனிதாபிமானத்துடன்தீர்க்கமுடியும்'
### லண்டன் பெண்கள் வரவேற்பில் பிரதமர் சிறிமா பேச்சு

லண்டனிலுள்ள இலங்கைப் பெண்கள் சங்கத்தார், காமன்ஸ் சபையில் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவுக்கு ஓர் வரவேற்பு உபசாரம் அளித்தனர். பல பெண் ஸ்தாபன பிரதிநிதிகள் உட்பட 500 பெண்கள் கூடியிருந்தனர்.

பிரதமர் அக்கூட்டத்தில் கூறியதாவது:- பெண்கள் வகிக்க முடியாத பொறுப்பே எதுவுமில்லை. உலகம் பெரிய நெருக்கடியிலுள்ளது. மனித வர்க்கமே அழிந்து விடுமோ என்று கருதக்கூடிய இச் சமயத்தில் தாய்மார்களும், மனைவிமார்களுமாகிய நாம் உலக பிரச்சினைகளை அதிக மனிதாபிமானத்துடன் தீர்க்க முடிய வேண்டும்.

முதல் பெண் பிரதமராக இருப்பது எப்படி உள்ளது? என்று பலர் என்னைக் கேட்கிருர்கள். இது எனக்கு கவலையும் ஓரளவு அச்சமும் அளிப்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஏனெனில், இந்தப் பதவியில் நான் தோல்வி அடைந்தால், பெண் குலத்துக்கே நான் அவப்பெயர் கொண்டு வந்தவளாவேனென்று உணருகின்றேன். இது, அதிக உறுதியுடன் சேவை செய்ய என்னைத் தூண்டுவதாக உள்ளது.

எனது நாட்டுக்கு அதிக மகிமையும் புகழும் ஏற்பட வேண்டுமென்று நான் கனவு கண்டு வருகிறேன். முதலில் நான் பிரதமராக ஒப்பவில்லை. பின்னர் நான் எனது நாட்டுக்கும், எனது கணவருக்கும், அவர் ஸ்தாபித்த கட்சிக்கும் ஒரு முக்கிய கடமை செய்ய வேண்டுமென்பதை உணர்ந்தேன். அரசியலுக்கு நான் புதிதல்லவெனினும், அரசியல் அரங்கில் தீவிரமாகப் பங்குபற்ற காரணமாகும்.

பார்லிமெண்ட் அங்கத்தவரான மிஸ் ஜான் வைகர்ஸ், பிரதமர் சிறிமாவை வரவேற்றுப் பேசுகையில், ஒரு பெண்மணி பிரதமரானது, உலகத்துக்குப் பெண்குலத்துக்கே பெருமையாகும். ஒரு பெண்ணகவும், தாயாகவும் இருந்து பெற்ற அனுபவத்தின் பயஞக, அவர் தமது நாட்டுப் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் தீர்ப்பாரென்பதில் சந்தேகமில்லை" என்ருர்.

'பிரட்டனில் பெண்கள் உரிமைப் போராட்டத்தில் 50 வருடமாக ஈடுபட்டிருந்த தமக்கு, உலகத்தின் முதல் பெண் பிரதமருக்கு நன்றி கூறுகையில் புளகாங்கிதமேற்படுகிறது' என்ருர் மிஸஸ் கார்பட் ஆஷ்பி. இலங்கைப் பெண்கள் சங்கத்துச் சார்பாக திருமதி லாரல் காசிநாதர், நன்றி தெரிவித்தார்.

—

### காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

லண்டன், மார்ச். 9

காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாடு நேற்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் தலைமையில் ஆரம்பமாகியது. இந்தியப் பிரதமர் முதலாவதாகப் பேசி மகாநாட்டைத் துவக்கிவைத்தார்.

கெனடி ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அமெரிக்காவின் போக்கில் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கிறதென்று நேரு கூறியதாகத் தெரிகிறது.

மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள்பற்றிய முழு விபரமும் கிடைக்கவில்லை. சர்வதேச விவகாரங்கள் குறித்தும், உலக நிலைமை குறித்தும் பொதுவாக மகாநாட்டில் ஆராயப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிரதமர் நேரு மகாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் பக்கிங்ஹாம் அரண்மனைக்குப் போய் எலிசபெத் மகாராணியைச் சந்தித்தார்.

—

### கெனடி நிக்ருமா சந்திப்பு

வாஷிங்டன், புதன்

அமெரிக்கா வந்துள்ள கானு ஜனதிபதி நிக்ருமா ஜனதிபதி கெனடியை இன்று சந்தித்துப் பேசுவார் என்றும், காங்கோ விஷயம் இப்பேச்சில் பிரதான இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

—

### தூரகிழக்கு பொருளாதார மகாநாடு

புதுடில்லி, புதன்

ஆசிய தூரகிழக்குப் பொருளாதாரக் கமிஷன் 17வது மகாநாட்டை ரஷ்ட்ரபதி இராசேந்திரப்பிரஸாத் ஆரம்பித்து வைத்தார். 150 பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.


வெளிவந்து விட்டது!

அ. விசுவநாதன், B. A. அவர்களின்

1. குடியியலும் அரசாங்கமும்

முதலாம் பாகம்

சிரேஷ்ட தராதர வகுப்பு,
சர்வகலாசாலைப் பிரவேச வகுப்புகளுக்குரியது.

விலை ரூபாய் 3-00

★

2. இரண்டாம் பாகம் (அச்சில்)

★

3. குடியியல் 8-ம் வகுப்பு

திருத்திய பதிப்பு.

விலை ரூபாய் 1-75

★

ஏக விற்பனையுரிமை :

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

இணுவில் இளைஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வரும் 12-3-61 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ காலிங்கன் தியேட்டரிலிருந்து கே. கே. எஸ். வீதி வழியாகச் சைக்கிள் ஊர்வலமாகச் சென்று யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வார்கள். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் கலந்து கொள்ளலாம்.

—இணுவில் இளைஞர்கள்.

Advt. 52

### தேவை
### கே. ஜி. இன்டஸ்ரீஸ்

கே. ஜி. இன்டஸ்ரீஸ் தீப்பெட்டி ஸ்தாபனத்துக்கு 14 வயதுக்கு மேற்பட்டவர்களையும், 16 வயதுக்குட்பட்டவர்களுமான பெண்களின் சேவை தேவைப்படுகிறது. தீப்பெட்டித் தொழில் சம்பந்தமான பல்வேறு பகுதிகளில் இவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவர். விபரங்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் காலை 8மணிக்கும் 10மணிக்குமிடையில் நேரில் வந்து அறிந்துகொள்ளவும். முடிவு திகதி 25-3-61.

கே. ஜி. இன்டஸ்றீஸ்,
119, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
போன்: 7024

Advt. 53

### கேள்விப் பத்திரம்

சுன்னகத்தில் மின்சார நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் கட்டிடத்தைச் சுற்றி 1500 அடி மதில் கட்டுவதற்கு டி சமாசத் தலைவர் கேள்விப் பத்திரங்கள் அழைக்கின்றார். கேள்விப் பத்திரங்கள் 23-3-61 மத்தியானம் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் "சுன்னகம் மதில்கட்டகேள்விப் பத்திரம்" எனக் குறித்து, தலைவர், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

கேள்விப் பத்திரம் டி சமாசத் தலைவரிடமிருந்து ரூ. 50/- கட்டி 15-3-61க்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். டி மதில் கட்டும் இடத்தைக் கேள்விப்பத்திரம் அனுப்புபவர் பார்வையிடல் நலம்.

Advt. 54

## சிமேந்து தொழிலாளர் இன்று சத்தியாக்கிரகம்
### எஸ். ஜே. வி.யிடம் பணமுடிப்பு

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை சிமெந்து தொழிலாளர் யூனியனின் நிர்வாக சபையின் அவசரக் கூட்டத்தில் வருகிற 10-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வேலை நிறுத்தம் செய்வதென்றும், அன்று எட்டரை மணிக்குத் தொழிற்சாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஊர்வலமாகச் சென்று தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் 600 ரூபாய் முடிப்பொன்றை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டக் காரியாலய அரசாங்க ஊழியரைப் பொலிசார் தாக்கியதையும், தபால் சிப்பந்தியை இராணுவம் தாக்கியதையும், பாடசாலைகளை இராணுவம் ஆக்ரமித்திருப்பதையும் எதிர்க்கும் முகமாக ஒருநாள் வேலை நிறுத்தம்,

---

ஆசிரியருக்குக் கடிதம்

## சிறுபான்மையோரின் மொழி உரிமை

எமது மொழி உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை சிங்களத் தலைவர்கள் இறுதியில் வழங்கத்தான் போகிறார்கள் என்று எங்களில் நிதான சிந்தையுடைய பலர் கருதினர்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் பொழுது பலரும் ஆங்கிலம் படித்தனர். ஆங்கிலமே முக்கிய அரசகரும மொழியாகவும் இருந்து வந்தது. அப்போது ஆட்சியை நடத்த சிங்களமும் தமிழும் தகுதியுடைய மொழிகளாக இருக்கவில்லை. இப்பொழுது தமிழர்களாகிய நாம் தமிழிலேயே கற்பிக்கப்படுகிறோம். ஆனல் சிங்களமாகிய வேறொரு மொழியை அரசகரும மொழியாக உபயோகிக்கும்படி பலவந்தப்படுத்தப்படுகிறோம்.

இதனுல் தமிழ் மக்களுக்கு பெரும் கஷ்டமேற்பட்டிருப்பது கண்கூடு. இது போதாதென்று மூன்று வருட காலத்திற்குள் சிங்களத்தை நாம் உபயோகிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது. இதை ஒரு பெரிய 'பகிடி' என்றுதான் சொல்ல வேண்டும். தமிழர்களை, அவர்கள் செய்யும் தொழில்களை விடுத்து ஓடச்செய்துவிட்டு அந்த இடங்களில் சிங்களவர்களை அமர்த்துவதுதான் இதன் முக்கிய நோக்கமென்பதில் சந்தேகமில்லை. உண்மையில் சொல்லப்போனல், பாதுகாப்பற்ற சிறுபான்மையின் மீது சிங்கள அரசாங்கம் 'கெடுபிடி' யுத்தம் ஒன்றைத்தான் நடத்தி வருகிறது.

நீதிமன்ற மொழி மசோதா, சிங்களத் தலைவர்கள் மீது தமிழ் மக்கள் இம்மியும் நம்பிக்கை வைக்க முடியாது என்பதைத் தெளிவாக்கிவிட்டது. சுவையான பசப்பு வார்த்தைகளைக் கூறுவதின் மூலம் இந்த மசோதாவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று திரு. சாம் பி.ஸி. பர்னண்டோ எதிர்பார்க்கிறார். ஆனல் நாம் ஏமாறுவதாய் இல்லை.

மலாயாவில், ஆங்கிலம், தமிழ், மாலாய், சீனம் ஆகியவை அரசகரும மொழிகளாக விளங்குகின்றன. இந்தியாவிலும் நைஜீரியாவிலும் ஆங்கிலமும் உள்நாட்டு மொழிகளும் அரசகரும மொழியாகவிருக்கின்றன. இப்படியே சீன, ரஷ்யா ஆகிய நாடுகளும் தங்கள் மொழிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டுள்ளன.

இதனுல் அந்த நாடுகளில் ஐக்கியம் உரம்பெற்றிருக்கிறதேயன்றி குலைந்து போகவில்லை. நிராதரவான சிறுபான்மை மக்கள்மீது தங்கள் மொழியைச் சட்டத்தின் மூலம் திணித்துள்ள பெரும்பான்மையினர் உலகத்திலேயே சிங்களவர்கள்தான். உலகக் கண்களின் முன் அவர்கள் கண்டனத்துக்குரியவர்களாகவிருக்கிறார்கள். குறுகிய குடியேற்ற சாதித்துவேஷ இராட்சதனுக்கு தங்கள் உடலிலுள்ள கடைசித் துளி இரத்தம் வரை தியாகம் செய்வதற்கு ஆயிரக்கணக்கான தமிழ்ப் பேசும் மக்கள் தயாராய் இருக்கிறார்கள். தமிழ் மக்களிடையே பிரிந்து போகும் மனப்பான்மை ஏற்பட்டிருந்தால் அதற்குச் சுதந்திரக் கட்சி அரசாங்கம்தான் முக்கிய காரணம்.

சிங்களத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆங்கிலம், தமிழ் ஆகியமொழிகளையும்அரசகரும மொழிகளாக்க வேண்டும். ஆங்கிலம் இல்லையென்றல் நம் நாட்டில் அறிவுவிருத்தியை எதிர்பார்ப்பதியலாது. அதுவும் இல்லையென்றல் நியாயமான அளவாவது தமிழ் உபயோகிக்க வழியேற்பட வேண்டும். அந்த நியாயமான அளவு தமிழ் உபயோகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதாய் இருக்க வேண்டும்.

ஜே. எஸ். நிக்கலஸ்
யாழ்ப்பாணம்

---

# மட்டக்களப்பில் உப்பு, சாராயத்துக்கு தட்டுப்பாடு

## பல ஊர்வலங்கள் கச்சேரிக்கு முன் சென்று மறியல் செய்தன

மட்டக்களப்பு, வியாழன்

வழக்கம்போல் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கோட்டைக்கல்லாறிலிருந்து பெண்களைக் கொண்ட பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டது; மாணவர் மன்றத்தின் சார்பாகவும் ஓர் ஊர்வலம் நடைபெற்றது. 4 ம் வட்டாரத்திலிருந்து ஆண்கள், பெண்களைக் கொண்ட ஊர்வலம் பிரதான வீதிவழியாகப் போய் இன்று பிற்பகல் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டது.

அரசாங்க அதிபர் நேற்றுக் கொழும்பு சென்றிருக்கிறார்.

இங்கு சாராயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் விசேஷ பர்மிட் மூலம் அவற்றைப் பெற அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உப்புக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது ஒருவருக்கு ஒரு ருத்தல்வீதம் உப்பு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

வட்ட மேசை மகாநாடொன்றைக் கூட்டிப் பிரச்சினைகளைப் பிரதம மந்திரி தீர்த்து வைப்பார் என எதிர்பார்ப்போமாக. இதை விடுத்து, பிரதமரும் அவரது அரசாங்கமும் நிராயுதபாணிகளான தமிழர் மீதும் முஸ்லிம்கள் மீதும் பலாத்காரத்தைப் பிரயோகிப்பார்களானல், இது இச் சிறுபான்மைச் சமூகத்தினரைப் படிப்படியாக ஒதுக்கி விடுவதற்குத் தொடுக்கும் ஒரு போராகவே முடியும்.

நாளை கூட்டுறவுப் பண்டகசாலைத் தொழிலாளர்கள் பெரிய அளவில் சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு நிதி திரட்டிவருகிறார்கள்.

அடுத்த வாரம் அரிசிப் பங்கீடு விநியோகத்திற்கு ஒருவித ஏற்பாடும் செய்யப்படவில்லை என்றும், இது ஒரு பிரச்னையாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இன்று நடத்திய கூட்டம் ஒன்றில், சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ளும் ஆசிரியர், மாணவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தன் நிரந்தரக் காரியதரிசி மூலம் கல்விமந்திரி அனுப்பிய சுற்றுநிருபம் ஒழுங்கீனமானது என்றும் இதை வாபஸ் பெற வேண்டுமென்றும், தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இவ்விஷயமாய் நடவடிக்கை எடுக்குமாறும், ஆசிரியர்களின் பாதுகாப்புக்கும் அது நடவடிட்கை எடுக்குமாறும் கோரப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் கண்டித்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கூட்டம் நடத்தவேண்டுமென்றும் அது ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

## பி. பி. ஸி. யில் பிரதமர் சிறிமா

இலங்கைப் பிரதம மந்திரி சிறிமா, லண்டன் பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியில் வெளி நாட்டு மூலதனத்தை இலங்கை வரவேற்பதாயும், காமன்வெல்த் மெம்பர்கள் ஒருவருக்கொருவர் மூலதனம் உதவ வேண்டுமென்றும், ஐ. நா. சபையை பலப்படுத்த வேண்டுமென்றும், காமன்வெல்த்தை கூடுமானவரை விஸ்தரிக்க வேண்டுமென்றும், பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் எவ்வித பிரச்சினைகளுமில்லை என்றும் தெரிவித்தார்.

## சாவல்கட்டு கி. மு. சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவல்கட்டு கிராம முன்னேற்றச் சங்கம் சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியதைக் கண்டித்தும், ராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறது.

சாவல்கட்டு கிராம முன்னேற்றச் சங்கத்தின் கூட்டம் தலைவர் திரு. மு. நாகமுத்து தலைமையில் நடைபெற்றது. தொழிலாளர் ஊர்வலமொன்றை நடத்துவதென்றும், சத்தியாக்கிரகிகளுக்குக் குளிர்பானம் வழங்குவதென்றும், பணமுடிப்பொன்றை வழங்குவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.


கம்பீரமாகத் தோற்றமளிக்க
மௌலானா சாரங்களை
அணியுங்கள்.



மௌலானா (சிலோன்) லிமிட்டெட்
கொழும்பு கண்டி

# இராணுவத்தை வாபஸ் பெற வற்புறுத்து

## மாநகரசபை முன்றிலில் மாபெரும் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'பொலிசாரும் இராணுவத்தினரும் அரசாங்க சேவையாளரையும் தொழிலாளரையும் மிலேச்சத்தனமாகத் தாக்கிய ஜனநாயகத்துக்கெதிரான செயலை உடனடியாக விசாரணை செய்யுமாறு அரசாத்கத்தைக் கேட்டால், பயமுறுத்தும் சத்தியாக்கிரகிகளிடமிருந்து காப்பாற்றுகிறேம் என்று அவர்களை இடமாற்றம் செய்ய ஆலோசனை செய்வது வேடிக்கையாக இருக்கிறது' என யாழ் நகர மண்டப முன்றிலில் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தின் பின் நடைபெற்ற வடமாகாண அரசாங்க தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். இரத்தினசபாபதி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் சத்தியாக்கிரகிகள் தடுத்தார்கள். பொலிசார் தாக்கினர். இப்படித் தாக்குபவர்கள் இருக்கும்வரை நாம் காரியாலயங்கள் உள்ளே செல்ல அஞ்சுகிறேம் என்ருர்.

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. விசுவநாதன் பேசுகையில் தொழிலாளர்தான் உரிமைக்குத் தயங்காது செயலாற்றக் கூடியவர்களென்றும் அவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட இன்னலுக்காக அரசாங்கத்திடம் முறையான விசாரணை செய்யத் தொடர்ந்து வற்புறுத்துவார்களென்றும் கூறினர்.

அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. துரைராஜசிங்கம், தொழிலாளர் தமது ஒற்றுமையை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டிவிடடார்களென்றும் மேலும் அரசாங்கம் இராணுவத்தினரை வாபஸ்பெருவிட்டால் இன்னும் பல வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெறலாமென்றும் கூறினர். அவர் மேலும் பேசுகையில் ஏழைத் தொழிலாளி ஒருவரைத் தாக்கினுல் தொழிலாளர்கள் பொறுக்க மாட்டார்கள் என்பதை அரசாங்கத்திடம் தாம் வற்புறுத்த விரும்புவதாகவும் சாத்வீகத் துறையில் சத்தியாக்கிரகம் செய்பவர்களைத் தாக்க துப்பாக்கிகளையெல்லாம் உபயோகப்படுத்துவது கேலியான விஷயமென்றும் நம் நாட்டைப் பாதுகாக்க வைக்கப்பட்டிருக்கும் இராணுவப்படை நாட்டிலுள்ளவர்களையே பதம் பார்க்கத் தொடங்கிவிட்டால் இதை எதிர்க்காமலிருக்க முடியுமா என்றும் கேட்டார்.

பல தொழிற் சங்கங்களைச் சேர்ந்த திருவாளர்கள் ஆர். ஆர். தர்மரெத்தினம், ஏ. ஞானப்பிரகாசம், வி. ஆர். ஜி. பரமானந்தம், எஸ். ஜீவரெத்தினம், எஸ். ஆசீர்வாதம், அருமைநாயகம். ஆகியோரும் பேசினர்.

---

## மட்டக்களப்பில் தாவர நோய் தடுப்பு நிலையம்

கொழும்பு மார்ச். 8

தாவரங்களைப் பூச்சிகள் அழித்து நாசம் செய்வதைத் தடுப்பதற்கான வழிவகைகள்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கென அரசாங்கம் மட்டக்களப்பில் தாவர நோய்தடுப்பு நிலையம் ஒன்றை நிறுவியிருக்கிறது.

தேசிய உணவு உற்பத்தி இயக்கத்தில் பொது மக்கள் அதிகமாகக் கலந்துகொள்ள வழி செய்ய வேண்டுமென்று விவசாய மந்திரி அறிவித்ததைத் தொடர்ந்து விவசாய இலாகா இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## காங்கோவில் சமாதானம் நிலவச் செய்ய உறுதி

### கெனடி, நிக்ருமா அறிக்கை

நியூயோர்க் மார். 9

காங்கோவில் சமாதானம் நிலவச் செய்வதற்காக ஐ. நா. மூலம் தார்மீக பொருளாதார உதவிகள் செய்வதென்று அமெரிக்க ஜனதிபதி கெனடியும், கான ஜனதிபதி நிக்ருமாவும் வெளியிட்டிருக்கும் ஒரு கூட்டறிக்கையில் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஐ. நா. செய்யவேண்டிய சேவைகள் பற்றியும், அந்த நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவது பற்றியும், ஆபிரிக்க நாடுகளுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கச் செய்வதுபற்றியும், இரு ஜனதிபதிகளும் கருத்துப் பரிமாறிக்கொண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**சீனுபற்றி கெனடி**

சீனுவுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலுள்ள நெருக்கடி தீர வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும், ஆனல் அதற்காகத் தாம் சீனுவுக்கு அடிபணியப் போவதில்லையென்றும் கெனடி அறிவித்திருக்கிருர்.

---

## வண்ணை சிவன்கோவில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திரு வண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியேஸ்வர சுவாமி கோவிலில் வருகிற 13-ந் திகதி திங்கட்கிழமை மகோற்சவம் ஆரம்பமாகி ஏப்ரல் 6-ந் திகதியுடன் முடிவடைகிறது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திரு. மணிபாகவதர், "அப்பரின் வீர நெறி" என்பது பற்றி இக்கோவிலில் சங்கீத கதாப்பிரசங்கம் செய்கின்ருர்.

---

## "இராணுவத்தை உடனே வாபஸ் பெறுக"

வேலணை, மார்ச்9

இராணுவத்தை வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து உடனடியாக வாபஸ் பெறும்படி அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று வேலணை கிராமச்சங்கக் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு தலைவர் திரு. வ. கந்தசாமி தலைமை வகித்தார்.

சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியதைக் கண்டிக்குட் தீர்மானம் ஒன்றும் கூடத்ம் தில் நிறைவேற்றப்பட்டது.

---

## இனி கல் விழாதாம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

புதன்கிழமை இரவு, கச்சேரி முன் சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த பெண் தொண்டர்கள் முன்னிலையில் ஒரு கல்வந்து விழுந்ததாகவும் அது கச்சேரியின் உட்பக்கமிருந்துவந்ததாகவும் தமிழரசுக் கட்சித் தலைவர் ஒருவர் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார். இதுபோன்ற சம்பவம் எதுவும் நிகழாதவாறு கவனித்துக்கொள்வதாக அரசாங்க அதிபர் வாக்குறுதி அளித்தார்.

## இலங்கைக்கு பாராட்டு

கொழும்பு, மார்ச் 8

டச்சுக் கப்பல் ஒன்றுக்கு கொழும்புத் துறைமுகத்தில் எரிபொருள் வழங்க மறுத்ததற்காக இந்தோனேஷிய மாணவர்கள் இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டியுள்ளனர்.

---

## நீர்வேலி கிராமச் சங்கம்

கேரப்பாய், மார்ச் 8

நீர்வேலி கிராமச் சங்கத் தலைவராக சமீபத்தில் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். பி. நடராஜாவுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

நீர்வேலி கிராமச் சங்கத்தில் மொத்தம் 12 அங்கத்தவர்களில் 10 அங்கத்தவர்கள் பிரேரணையை ஆதரிப்பார்களென்றும் இப்பொழுது நடைபெற்றுவரும் தமிழ் மொழியுரிமைப் போராட்டத்திற்கெதிராக அவர் பேசியதாக பத்திரிகையில் வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதென்றும் தெரிகிறது.

---

## நேரு--ஸ்ரீமா இன்று பிரத்தியேக சந்திப்பு

### மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் பேச்சு

லண்டன், மார்ச்9

இன்று நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசினர். கிழக்கு மேற்கு உறவுகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் அப்போது கூறினர். ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமர் நேருவை நாளை காலையில் பிரத்தியேகமாகச் சந்தித்துப் பேசுவார்.

ஐ.நா சபையில் சீனவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற முயற்சியை சாம்ராஜ்ய நாடுமள் ஆதரிக்க வேண்டுமென பிரதம மந்திரி திரு. நேரு மகாநாட்டில் கூறிய யோசனையை இதர பிரதமர்கள் ஏற்றுக் கொண்டதாய்த் தெரிகிறது.

காங்கோ உள்ளிட்டுப் பல சர்வதேசப் பிரச்சனைகள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

---

## கார்மீது ராணுவ லொறி மோதியது

யாழ்ப்பாணம், வெள்ளி

முதலாம் குறுக்குத் தெருவின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த தமிழ் 'சிறி' பொறித்த கார் ஒன்று ராணுவ லொறியொன்றினுல் மோதப்பட்டு சேதமுற்றது. அதே லொறி ஒரு 'ஸ்கூட்டர்' மீதும் மோதியது.

கார்மீதும், ஸ்கூட்டர் மீதும் மோதிய இராணுவ லொறி அங்கிருந்து 'நழுவ' முயற்சி செய்தபொழுது இரு பெண்கள் கூச்சலிட்டு தடைசெய்தனர்.

பின்னர் பொலிசார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை செய்தனர்.

## சுருட்டுத் தொழிலாளர் அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

மொழிஉரிமைப் போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும் பொலிசார், இராணுவத்தினரின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும்முகமாகவும் சுருட்டுத்தொழிலாளர் சென்ற புதன் கிழமையும் வியாழக் கிழமையும் வேலை நிறுத்தம் செய்ததுடன் சத்தியாக்கிரக இயக்கத்தில் தொடர்ந்து பங்குபெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

---

திருகோணமலை மார்ச் 9

காணமல் போன இரு இளைஞர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். தண்ணீர் கொண்டு வருவதற்காகச்சென்ற இருவரும் காட்டில் காணமல் போயினர். 24 மணி நேரத்துக்குப் பின்னர் காட்டில் மயங்கிய நிலையில் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

---

## 5000 மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரின் நடவடிக்கையைக் கண்டித்தும் இராணுவத்தை வாபஸ் பெறக் கோரியும் நேற்று தொழிற் சங்கங்கள் பல ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தன. கச்சேரிப் பகுதியில் மறியல் இயக்கத்தை யொட்டி மாநகரசபை ஒழுங்கு செய்துள்ள மலசல கூடங்களைச் சுத்தம் செய்வதற்காக நகர சபையைச் சேர்ந்த நகர சுத்தித் தொழிலாளர் சிலரை மேயர் நேற்று வேலை செய்ய ஒழுங்கு செய்திருந்தார்.


## ஆசிரியர்கள் ஊர்வலம்

9-3-61ல் நடைபெற்ற யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத் தீர்மானப்படி ஆசிரியர்கள் அனைவரையும் 11-3-61 சனிக்கிழமை மு. ப. 8மணிக்கு எமது சங்கக் காரியாலயத்திலிருந்து (54, ஜும்ஆ பள்ளிவாசல் ஒழுங்கை, பெரியகடை) புறப்படும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றேன்.

க. சத்தியானந்தசிவம்
காரியதரிசி
யா. த. ஆ. சங்கம்
யாழ்ப்பாணம்.

Advt 55


## ரெயில் நேரங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - கோட்டை |
| காலை 5.40+ | - பி.ப 1.20 |
| காலை 7.25 | - மாலை 7.15 |
| பி.ப 2.26 | - இரவு 10.05 |
| மாலை 6.36 | - காலை 5.15 |
| மாலை 8.52* | - காலை 6.15 |
| கோட்டை | - யாழ்ப்பாணம் |
| காலை 6.00 | - பி.ப 1.23 |
| காலை 6.45 | - மாலை 5.55 |
| பி.ப 2.15 | - இரவு 9.52 |
| மாலை 7.15 | - காலை 5.05 |

+ ஞாயிறு இல்லை
* ஞாயிறு மட்டும்





ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.

# ‘அரசாங்கமே முதல் நடவடிக்கை எடுக்க வேண்டும்’

## ‘வேலை நிறுத்தத்தை எதிர்நோக்கத் தயார்’

### இ. போ. சபை தலைவர் உறுதி

கொழும்பு, மார்ச் 9

பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினால் பஸ் சேவையைத் தடைப்படாமல் நடத்துவதற்கு பஸ் போக்குவரத்துச் சபை தயாராய் இருக்கிறது என்று இ. போ. சபைத் தலைவர் திரு. ஆ. டி. டி' சில்வா அறிவித்திருக்கிறார்.

"நாலு பஸ் ஊழியர் யூனியன்கள் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கின்றன. ஆனால் எல்லா பஸ் ஊழியர்களும் அந்தக் கோரிக்கைகளை ஆதரிக்கிறார்கள் என்று நான் கருதவில்லை" என்று திரு. சில்வா கூறினர்.

"போக்குவரத்துச் சபை பஸ் ஊழியர்களின் கஷ்டங்கள் பற்றிக் கொஞ்சமாவது கருணை காட்டுவதாகத் தெரியவில்லை. யூனியன்கள் சமர்ப்பித்த கோரிக்கைகளைப் பற்றி ஐந்து மணித்தியாலத்துக்கு மேல் ஆலோசனை நடத்தினர்கள். ஆனல் இறுதியில் தொழிலாளருக்குக் கிடைத்தது ஒன்றுமில்லை" இவ்வாறு சமசமாஜக் கட்சியின் ஆதரவில் இயங்கும் ஐக்கிய மோட்டார் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த திரு. டி. ஜீ. வில்லியம் கூறினர்.

அகில இலங்கை ஐக்கிய மோட்டரர் தொழிலாளர் யூனியனை இலங்கை மோட்டார் தொழிலாளர் யூனியன், ஸ்ரீ லங்கா ஜாதிக்க பரவாகன சேவக்க சமித்திய, லங்கா மோட்டார் சேவக்க சமித்திய ஆகிய தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கக்கூடுமென்று கருதப்படுகிறது.

---

## பால்கடைகளில் புதிய ரக பால்

கொழும்பு மார்ச் 9

விவசாய, காணி, அபிவிருத்தி மந்திரி திரு. சி. பி. டி. சில்வா நேற்று மருதானையில் புதிய அரசாங்க பால் கடையொன்றைத் திறந்து வைத்த பொழுது 'மாஜிய்' என்ற புதிய ஒருவகை பால் விற்பனைக்கு வைக்கப்பட்டது. கொழுப்புச் சத்துக் குறைந்துள்ள இந்தப்பால் உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுமாம்.

கொழும்பிலுள்ள இதரபால் கடைகளிலும் இப்பால் விற்பனைக்கு வைக்கப்படும் என்று தெரிகிறது.

---

## மலகாசி மகாநாடு

நியூயோர்க், மாரச் 9

மலகாசியில் காங்கோ நிலைமைபற்றி ஆராய்வதற்காக நடைபெறும் காங்கோ தலைவர்கள் மகாநாட்டுக்கு லுமும்பா ஆதரவாளரான கிஸெங்கா வரவில்லை, என்றாலும் மகாநாடு நடைபெறவே செய்கிறது.

யாழ்ப்பாணம் வெள்ளி

"இன்றுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கமே முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணப் பிரதேசக் கிளைக் காரியதரிசி திரு. ஐ. இ. அரியரத்தினம் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது:

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மிகவும் அபாயகரமான அரசியல் பொருளாதார நெருக்கடி உருவாகி வருகிறது. வழமையான பொருளாதார வாழ்க்கை வழிகளும் நிர்வாக வழிகளும் தடைப்பட்டுவிட்டன. இவைகளில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை நீடிக்க விடக் கூடாது. இது இந்நாட்டின் ஐக்கியத்துக்கும் சுதந்திரத்துக்கும் மக்களின் நலனுக்கும் பங்கம் விளைவிக்கக்கூடியது.

இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு முதல் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இராணுவ பலத்தைக் காட்டுவதன் மூலம் விரும்பத்தக்க பயன் பெறப்படவுமில்லை; பெறவும் முடியாது. தமிழரின் நியாயமான கோரிக்கைகளைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தால் அது உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

வாக்குறுதிகளும் ஆசை வார்த்தைகளும் தமிழர்களிடத்தில் நம்பிக்கையை ஊட்டாததுமன்றி பேச்சுவார்த்தைகளுக்கு அஸ்திவாரமும் இடாது.

இக்கட்டான இந்நிலைக்கு ஓர் முடிவு கட்டுவதற்கு தமிழ் அரசுக் கட்சி தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. அரசாங்க அலுவல்களை மறியல் செய்வதன் மூலம் விரும்பிய பலனை அடைய முடியாதென்பதைத் தமிழரசுக் கட்சி உணர வேண்டும். பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படும் உடன்பாட்டைத் தேசத்தைப் பிரிப்பதற்கு ஓர் படிக்கல்லாக உபயோகப்படுத்தப்பட மாட்டாதென்பதைத் தமிழ் அரசுக் கட்சி தெளிவுபடுத்தும்வரை அது சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதாகச் சொல்லுவது சிங்கள மக்களுக்கிடையே நம்பிக்கையை ஊட்டாது.

---

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது அரசாங்கத்தின் நிலையும் தமிழ் மக்களின் கோரிக்கையும் ஒத்துப்போக முடியாதென்று தோன்றும். ஆனல் பின்வரும் வழிகளில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் அடிப்படை இருக்கிறதென்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் உத்தியோக மொழியாக இருத்தல். இதன் மூலம் தமிழினத்தின் பூரணத்துவத்துக்கும் ஒருமைப் பாட்டுக்கும் உத்தரவாதமளித்தல்.

2. சிங்களம் இந்நாட்டின் அரசகரும மொழியாக இருப்பதன் மூலம் இலங்கையின் சுதந்திரத்தையும் ஐக்கியத்தையும் உத்தரவாதமளித்தல்.

இவ்விஷங்களைத் தமிழ் அரசுக்கட்சியும், அரசாங்கமும்ஏற்ருல் இத்துடன் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் ஒரு வழி வகுப்பதாகும்.

இப்படிப் பேச்சுவார்த்தை மூலம் ஓர் உடன்பாட்டுக்கு வரவும் உடன்பாடு ஏற்பட்ட பின் அதைப் பாதுகாக்கவும் கம்யூனிஸ்ட் கட்சி தனது முழு ஆதரவையும் அளிக்கும்.

## தமிழ் பேசும் மக்கள். மொழிப் போராட்டம்

சாவகச்சேரி

வரணிக் கிராமச் சங்கத்தின் முதற்கூட்டம் தலைவர் திரு. எஸ். நல்லமாப்பாணபிள்ளை தலைமையில் நடைபெற்றது. உபதலைவராக திரு. கே. ஆறுமுகம் தெரிவுசெய்யப்பெற்ருர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டம் கட்சி சார்பற்றதென்றும், அது தமிழ் மொழி பேசும் மக்கள் அனைவரதும் மொழிப் போராட்டமென்றும் பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் உடனடியாக அறிவித்தல்வேண்டும் என்று சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.

---

## 100 ரூபாய்கொடுப்பர்

வேலணை மார்ச் 8

வேலனை மேற்கைச் சேர்ந்த தலைகாட்டி ஐக்கிய நாணய சங்க கூட்டத்தில் மொழியுரிமைப் போராட்டத்துக்கு ரூபா 100 சேர்த்துக் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

---


உன்னத திரைச் சித்திரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மோடர்ன் (பதுளை)



என். டி. ராமராவ் – சௌகார் ஜானகி

வி. நாகையா — குசலகுமாரி

டி. எஸ். பாலையா — டி. ஆர். ராமச்சந்திரன்

பி. கண்ணும்பா — விஜயலட்சுமி

கிரீஜா — ஓ. ஏ. கே. தேவர்

பி. எஸ். வீரப்பா — ராஜநலா

மோகனு — எஸ். வரலட்சுமி

மற்றும் பலர் நடித்த

# ராஜ சேவை

பின்னணி:

திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா,
எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி.

டைரக்ஷன்:

கே. காமேஸ்வரராவ்

வசனம் – பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ்

சங்கீதம்: டி .வி. ராஜா

மனோகரா (யாழ்ப்பாணம்) நியோகா அன் த டைகர் மேன்

தினசரி 3 காட்சிகள் 3-30, 6-30, 9-30.

ஆங்கில சீரியல் படம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.